செ.வெ.எண்: 120 தமிழ்நாடு அரசு நாள்: 8-2-2012

மீன்வளத்துறை

**விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையம், தூத்துக்குடியில் நவீன மீன்பிடி பயிற்சி மற்றும் சிறுதரக் கம்மியர் பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பம் வரவேற்றல்.**

---

தூத்துக்குடி, மீன்வளத்துறை மூலம் விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையத்தில் 1-03-2012 முதல் 'நவீன மீன்பிடி பயிற்சி'(MORDERN FISHING COURSE) மற்றும் 'சிறுதரக் கம்மியர் பயிற்சி'(JUNIOR MECHANIC COURSE) ஆகிய இரு பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. பயிற்சி காலம் 10 மாதங்களாகும். பயிற்சியின் போது மாதம் ஒன்றுக்கு ரூ.400-00 வீதம் உபகாரச் சம்பளம் வழங்கப்படும். இரு பயிற்சிகளிலும் குறுகிய கால பயிற்சியாக மருத்துவ முதலுதவி பயிற்சி, ஆதார தீ தடுப்பு பயிற்சி மற்றும் கடலோர காவல்படை சான்றிதழ் போன்ற பயிற்சிகள் சம்பந்தப்பட்ட துறையினரால் நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

எனவே தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயதுக்கு மேல் 35 வயதிற்குட்பட்ட நன்கு தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களை 'நவீன மீன்பிடி பயிற்சி''(MORDERN FISHING COURSE)க்கும், 18 வயதுக்கு மேல் 30 வயதுக்குட்பட்ட குறைந்த பட்சம் 8 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் சிறுதரக் கம்மியர் பயிற்சி (JUNIOR MECHANIC COURSE)க்கும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப படிவங்களை "மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), 165, வடக்கு கடற்கரை சாலை, திரேஸ்புரம், தூத்துக்குடி-1" என்ற முகவரியில் அலுவலக வேலை நாட்களில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர் விண்ணப்பதாரர்கள் ரூ. 5-00 மதிப்புள்ள அஞ்சல் வில்லை ஒட்டி சுயவிலாசமிட்ட உறையின் மூலம் தபால் வழியாகவும் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 22-02-2012ம் தேதிக்குள் மேற்படி விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரர்கள் 27-02-2012 அன்று நேர்காணலுக்கு மேற்குறிப்பிட்ட முகவரியில் ஆஜராக வேண்டும்.

மேறகண்ட தகவலை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்கள

@@@@@@@@@

@@@@@@@

வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
தூத்துக்குடி

மீன்துறை இணை இயக்குநர்
(மண்டலம்) தூத்துக்குடி.